بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**Friday sermon Date 05-09-2014**

# GOD NEVER FORGETS HIS CREATIONS

# இறைவன் படைப்பினங்களை மறந்து விடுவதில்லை

**Hazrat Khalifathullah Munir Ahmad Azim (A)**

அனைத்து மக்களுக்கு சலாம் கூறிக் கொண்ட பிறகு தஷ்ஹீதும் தஅவ்வுசும் சூரா அல் பாத்திஹாவும் ஓதி, ஹஸ்ரத், கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அ) அவர்கள் கீழ் வருமாறு கூறினார்

கடந்த வெள்ளிக் கிழமைக் குத்து.ஃ.பாவின் தொடர்ச்சி என்ற நிலையில் உலகின் இன்றைய நிலையைக் குறித்து பரிசோதனைசெய்தால் ஒரு நபியின் தேவை மிக அவசியமனாது என உணர முடியும். நபிமார்களுமாக தொடர்புடைய நம்பிகையையும், பிரகாஷத்தையும் நமக்கு இன்று எங்கு கண்டுக் கொள்ள முடியும்? நபிமார்கள் வழியாகவும் அவர்களின் தோழர்கள் வழியாகவும் தென்பட்ட இறை அடையாளங்களும் அற்புதங்களும் இன்று எவருக்கு காட்டிட இயலும்? ஒவ்வொரு மத நூல்களிலும் காணும் விஷயங்களை பற்றி நமக்குத் தெரியும். ஆனால் அதன் செயல் வடிவிலான முன் மாதிரியை நமக்கு எங்கு கண்டு கொள்ள முடியும்? மூஸா நபி(அ) மின் தோழர்களுக்கு கிடைத்திருந்த தீர்க்கதரிசன தன்மை எங்கே? ஈசா நபி (அ) மின் தோழர்கள் காட்டிய அற்புத அடையாளங்கள் எங்கே? எல்லா மதங்களும் வாழ்ந்திருக்கின்ற ஒரு இறைவனைப் பற்றி பேசிக் கொள்கின்றது. ஆனால் வாழ்ந்திருக்கின்ற அந்த இறைவன் இன்றும் வாழ்ந்திருக்கின்றானோ? **மோசையின் தோழர்களோடு ''யகோவா'' வைத்திருந்த பந்தம் இப்போதும் தொடர்ந்து கொள்ளாதது ஏன்? அல்லது ஜீசஸின் தோழர்களோடு பரலோகபிதா வைத்திருந்த பந்தம் தற்பொழுதும் தொடர்ந்துக் கொள்ள வேண்டியதல்லவா? அல்லது முஸ்லீம்களிடம் அல்லாஹ் வைத்திருந்த பந்தம் இப்போதும் தொடர்ந்துக் கொள்ளாதது ஏன்?**

அவ்வாறு தொடர்ந்துக் கொள்ள வில்லை என்றால் இந்த தடுமாற்றத்திற்கு என்ன நியாயாம் நமக்கு கூறிக் கொள்ள முடியும்? அந்த தடுமாற்றத்திற்கு காரணம் இறைவனா அல்லது மனிதர்களா? பல்வகையான மதநூல்கள் பரிசோதித்துக் கொண்டால்; இவ்வகை மாற்றங்கள் ஏற்படுத்திக் கொண்டது இறைவன் அல்ல என்பது உறுதியாகி விடும். இந்த நூல்களில் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளுக்கு தவறான விளக்கமளித்து இறை விருப்பதைக் கூட கீழ் மேல் மறித்துக் கொண்டார்கள்.

இறைவன் அவனது அடியார்களிடம் இந்த நிலையில் அல்லது அந்த நிலையில் உரையாடியிருந்தான் என்று நமக்கு கூறிக் கொள்ள அனுமதியுண்டு. இறை அடியார்களிடம் இறைவன் வைத்திருந்த பந்தம் இந்த நிலையில் அல்லது அந்த நிலையில் ஆகலாம். ஆனால் இறைவன் எவரிடமும் உரையாடியதேயில்லை என்று நமக்கு உறுதியாக கூறிக் கொள்ள முடியாது. அதைப் போன்றே ஒரு மதத்தின் உண்மையினை விளக்கிக் கொள்வதற்கு இறைவன் ஒரு அற்புதவும் காட்டியதில்லை என நமக்கு கூறிக் கொள்ள முடியாது அல்லது ஒரு நபியின் வழியாக ஒரு அற்புதமும் இறைவன் பிரகடனப்படுத்தியதில்லை என நமக்கு சொல்லிக் கொள்ளவும் இயலாது. ஆனால் கடந்த காலத்தில் இறைவன் அவனது அடியார்களிடம் வைத்திருந்த பந்தம் சாதாரணமான நிலையில் நமக்கு புரிந்துக் கொள்வதற்கு அல்லது அங்கீகரித்துக் கொள்வதற்கு வருத்தம் ஏற்படலாம். ஆனால் பல வேத நூல்களையும் நுட்பமாக பரிசோதித்துக் கொண்டால் இந்த

உலகத்திற்கு விதி சொல்லும் அளவிற்கான பந்தம் இறைவன் அவனது அடியார்களிடம் வைத்திருக்க வில்லை என நேற்மையாகவும் உறுதியாகவும் கூறிக் கொள்ள நமக்கு ஒரு பொழுதும் இயலாது. அதவாது வாழ்ந்திருக்கின்ற ஒரு இறைவன் இருக்கின்றான். அவன் விரும்புகின்றவர்களின் மீது! அல்லது அவன் நேசிக்கின்றவர்களின் மீது! அவனது வல்லமையை பிரகடனப் படுத்திக் கொள்கின்றான். அவனது கருணையைக் காட்டிக் கொள்கின்றான்.

விளக்கத்தின் வாசல் நன்கு திறந்து கொண்டு, பிறகு விளக்கினால் வார்த்தைகளை மட்டுமன்றி கடந்த கால வேத நூல்களில் காணும் நபி மார்களின் வாழ்கை சம்பவங்கள், அவர்களின் தோழர்களின் சம்பவங்கள் அவர்களை ஏற்றுக் கொண்டிருந்தவர்களின் சம்பவங்கள் பரிசோதித்துக் கொண்டால் விளக்கமளித்தவர்களுக்குக்கூட அவர்கள் எண்ணியதை பரிபூரணமான நிலையில் வெளிப்படுத்திக் காட்ட முடியவில்லை என நம்பிக் கொள்ள நாம் கட்டாயப்படுத்தப்பட்டவர்களாவோம். ஆனால் விஷயங்கள் இவ்வகையில் ஆனாலும் இதன் பெயரில் இறைவன் மீது எந்த குற்றக் குறைவையும் கூறிக் கொள்ளயியலாது. அனைத்து மதங்களின் போதனைகளும் ஒரு கருத்தின் அடிப்படையில் இருந்து உருவாகிக் கொண்டதேயாகும் என நாம் கூற வேண்டும். மிகத் தெளிவான நிலையில் இறைவன் தனது அடியார்களிடம் பருமாறிக் கொண்டான் என்பதும் அவனது நபி மார்கள் மூலமாகவும் அவர்களின் தோழர்கள் மூலமாகவும் அற்புதங்கள் வெளிப்படுத்திக் கொண்டான் என்பதும் உண்மையே ஆகும். அது வழியாக அவர்களின் நம்பிக்கை வலுப்படவும் முழுமைப் பெறவும் செய்தது. மட்டுமல்லாமல் வாழ்ந்திருக்கின்றவனும் ஆற்றல் வாய்ந்தவனுமான ஒரு இறைவனைக் குறித்து உலகிற்கு அவர்கள் கற்பிக்கவும் அம்மக்களின் நம்பிகைகளை சீர் அமைக்கவும் செய்தனர்

கடந்த காலங்களில் அவ்வாறு நிகழ்ந்தது என்பது உண்மையாகும். அந்த உண்மைகளுக்கு நேர் கண் மூடிக் கொள்ள எவருக்கும் இயலாது. கடந்த காலங்களில் இவ்வாறு நிகழ்ந்திருக்க, இப்போது ஏன் அவ்வாறு நிகழுவதில்லை என்ற கேள்வி நியாயமானதாகும். கடந்த காலங்களில் இறைவன் அவனது அடியார்களிடம் பேசியிருந்தான் என்றால் ஏன் இன்று அவனது அடியார்களிடம் பேசிக் கொள்ளவில்லை?. கடந்த கால மக்களின் வேதனை கட்டங்களில் அவன் மார்கத்தரிசனம் வழங்கியிருக்க இப்போதைய வருத்த கட்டத்தில் அவன் அவ்வாறு செய்துக் கொள்ளாமல் இருப்பது ஏன் என சந்தேகம் வரலாம். எல்லா மதங்களிலும் குற்றக் குறைவு ஏற்பட்டுக் கொண்டது. அம் மதங்களில் உண்மையினை பார்க்க முடியாது. அதற்கு ஏற்றவார் செயல்பட்டுக் கொள்வதன் மூலம் எவ்வித பலனும் கிடைப்பதில்லை. அப்படி என்றால் இந்த உலகில் ஒரு உண்மையான மதம் நிலை கொள்ள வேண்டுமல்லவா? அந்த உண்மை மதத்திற்கு ஏற்றவார் மக்கள் செயல்பட்டுக் கொள்ளாத காரணத்தினால் தானோ அவர்களுக்கு ஆன்மீக முன்னேற்றத்தை எட்ட இயலாதிருப்பது?

இதில் எவ்வழியை நாம் அங்கீகரித்துக் கொண்டாலும் ஒரு கேள்வி எழும்பும் அதாவது இறைவன் ஏன் ஒரு புதிய மதத்தை தோற்று விக்காமல் இருப்பது? ஒரு நேர்மையான மதம் தேவை என்று இறைவன் எண்ணுகின்றான் என்றால் அல்லது அவ்வாறு ஒரு மதத்தை அவன் ஏற்கனவே தோற்றுவித்துக் கொன்டான் என்றால், அதற்கு எற்றவார் மக்கள் செயல்பட்டுக் கொள்ளமல் இருக்கின்றார்கள் என்றால், அந்த உண்மை மதம் வழியாக மக்களை நடத்திக் கொள்ள ஒருவரை எழும்பச் செய்யாமல், இருப்பது ஏன்? அவ்வாறு எழுப்பிக் கொண்டால் மக்களுக்கு இறைவனுமாக நெருங்கிக் கொள்ளவும் அவர்களைப் படைத்தவன் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவும் முடிந்து விடுமல்லவா?

மனித சமுதாயம் சிந்தனைக் குழப்பத்திலும் தவறிலும் வீழ்ந்துக் கொள்ளும் வேளைகளில் அதை காண்கின்ற அன்புடையோனும் கருனையாளனுமான இறைவன் அசையாமல் இருந்துக் கொள்வான் என நம்பிக் கொள்ள முடியாது. அவர்களை நேர்வழியில் நடத்தி செல்ல வேண்டுமல்லவா? நிச்சயமாக இறைவன் ஒரு தந்தையை விடவும் ஒரு தாயை விடவும் கருணை காட்டிக் கொள்பவனும் தயவுடையவனும் ஆவன். ஒரு குழந்தையை பெற்றெடுத்தார்கள் என்ற உரிமையில் அன்பும் பண்பும் மட்டுமே அந்த குழந்தையுடன் தாய் தந்தை வைத்துக் கொள்வது. ஆனால் இறைவன் படைத்தவன் மட்டுமல்லாமல் அவன் அவர்களின் எல்லாம் எல்லாம் ஆவான். பெற்றோர்களும் குழந்தைகளும் ஒன்றுக் கொன்றான பந்தம் சிறு காலம் மட்டுமே நிலை நிற்பது. ஆனால் மனிதர்களும் இறைவனும் ஒன்றுக் கொன்றான பந்தம் என்றென்றும் நிலை நிற்பது ஆகும். பெற்றோர்களின் ஆற்றலும் போற்றலும் சிறு காலம் நிலை கொள்வதும் பிறகு அழிந்துக் கொள்வதும் ஆகும். ஆனால் அல்லாஹ்வின் ஆற்றல்கள் என்றென்றும் நிலை நிற்பதும் அவனது போற்றல் கேடுபாடுகள் ஏற்காததும் ஆகும். அவன் அவனது படைப்பினங்களுடன் அவ்வகையிலான பந்தமே வைத்திருப்பது. அபாரமான ஆற்றல் உடையவனான இறைவன் தனது படைப்பினங்களை மறந்துக் கொள்வதில்லை. அவர்களின் வேதனைகளை காணவில்லை என எண்ணுவதில்லை. அவன் படைப்பினங்களுக்கு அவனது கருணை மூலமாக அருள் செய்கின்றான். மனிதர்கள் கருணையில்லாமல் ஏனையவர்களிடம் பருமாறிக் கொள்வதைப் போன்று அவன் செய்வதில்லை. அவன் படைப்பினங்களுக்கு ஆன்மீக வழியும் முன்னேற்றமும் வழங்கி கொள்பவன் ஆவான். அந்தகாரத்தில் அலைந்துக் கொள்ள அனுமதிக்காமல் அவன் உண்மையை தேடிக் கொள்வோர்களுக்கு பிரகாசத்தை வாரி வழங்குகின்றான்.

இது ஒரு பெரிய விஷயமாகும். வருகின்ற வெள்ளிக் கிழமையும் இன்ஷா அல்லாஹ். இவ் விஷயத்தை தொடர்ந்து பேசிக் கொள்வேன். நபிமார்களின் தோற்றம் என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் அருளாகும். இதை மிக நல்ல நிலையில் விளக்குவதற்கான தௌபீக் அல்லாஹ் எனக்கு வழங்குவானாக., அவனது படைப்பினங்களை நவீகரிப்பதற்கும் ஆன்மீகமாக மனுகுலத்தை சீர்திருத்துவதற்கும். இன்ஷா அல்லாஹ் இந்த பிரசங்கத்தை நன்கு புரிந்துக் கொள்வதற்கான ஆற்றல் உங்கள் அனைவர்களுக்கும் வழங்கி அவன் அருள் புரிவனாக . ஆமீன்.

**Issued by:**
Jamaat-UI-Sahih-Al-lslam
Dawa Department
Tamilnadu (Regd.No:A/693
Web: www.jamaat-ul-sahih-al-islam.com

*Translated by*
**Azim Ahmad**
Sadr Sahibul Faraj
Kerala/ Tamil Nadu
Cell: 9947181650
9789180817